கடவுள் துணை.

அப்பர்பர்மா வென்னும்

ஆவா சண்டை.

முதற்பாகமும் இரண்டாம்பாகமும்

அடங்கியிருக்கின்றன.

(०)

இஃது,

சிறுமண்வூர்

முனிசாமி முதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

உ

அப்பர்பர்மாவென்றும்

ஆவா சண்டை.

—(*)—

விநாயகர் துதி-நேரிசைவெண்பா.

இந்தியா வெனும்பதியி லிந்திரனைப் போலாளும்
லண்டனி ரோப்பியர்கள் ரஞ்சிதத்தை—அண்டரினும்
சாற்ற வரிதாகுஞ் சரிதையினை யான்புகழ்ந்து
போற்றுதற்கு வைங்கரன்றாள் போது.

கு ம் மி.

கும்மியடிபெண்கள் கும்மிபடிகுயின் விக்டோரிசெங்கோல் தழைத்தோங்க, செம்மையாகச்செய மங்களமென்றே சித்திரக்கும்மி யடியுங்கடி. 1

சீரோங்குமிங்கிலிஷ் துரைத்தனமாமிந்த செல்வச்செங்கோலைப் புகழ்வதற்கு, நீரோங்குஞ்செஞ்சடை யிம்பனருட்டும்பி நீண்டகணபதி யென்றனையே. 2

நீதியனுவேனுஞ் சோராமற்புவி நீடூழிகாலமுந் தவறாமல், ஆதியோடந்தமா யாளுங்கதைசொல்ல ஆறுமுகப்பெருமாள்துணையே. 3

போகர்பரம்பரை நீண்டதுவுமிந்த பூமியெல்லாஞ்ஜெயங் கொண்டதுவும், வாகாய்ச்சொல்லி வழங்குதற்குகலை வாணிசரஸ்வதி தாட்டுணையே. 4

அனுமிங்லாண்டு அரசின்பெருமையென் னாயுளுள்ளமட்டுஞ் சொன்னாலும், மாளாதென்று மதித்துக்கொண்டேயொரு மனுவுகேட்கிறே னிந்துக்களே. 5

கண்டதைமேலாகச் சொன்னாலுமில்லை காணாதசேதியை விண்டாலும், விண்டலமண்டலர் தானறியயெந்தன் விகடக்கவிக்கு மனம்பொறுப்பீர். 6

முந்திதுலுக்க ரரசுக்குள்ளேநம்ம யிந்துக்கள்பட்ட கொடுந்துயரை, எந்தவிதமாகச் சொல்லவென்றாலுமிவ் வேடுங்குறுகிதே பெண்ணரசே. 7

முன்னாளிருந்த அரசர்மௌடிகத்தை மூவருஞ்சொல்ல வரிதெனவே, பன்னியநூல்களுஞ் சொல்லிருக்குஞ்சிலர் பார்த்திருப்பார்நாமுங் கேட்டிருப்போம். 8

கைத்தொழிலாய ஒவ்வொருவேலைக்குங் காண்டரியபல யந்திரங்கள், முத்தொழில்வேந்தனைப் போலமைக்கும்புத்தி முன்னுள்ளரசருக் கண்டிலமே. 9

தேவரிடுக்கண்ட விற்கவறுமுக வேல்கிருபைசெய்த வாறது
போல், பூவுலகெங்கும் விக்டோரியராசாள புண்ணியமூர்த்தியென்
செய்தனமோ. 10

காடுமலைகள் செடிதிருத்தல்பெருங் காற்றெனவேகும் ரயில
மைத்தல், நீடுமுலகினை பேடைபோலேந்திய நீதியென்சொல்லு
வேன் பெண்ணரசே. 11

தந்தியும்யந்திரம் குழையாச்சு-யிப்போ தானாய்நடக்கும் ரெ
யிலாச்சு, முந்தியிருந்த வரசரெல்லாமுழு மூடர்களல்லவோ பெ
ண்ணரசே. 12

அடக்காதவேந்த ரொருவரில்லையிவ ராளாபுரிநக ரெங்குமி
ல்லை, இடிக்காதகோட்டைக ளொன்றுமில்லையிவ ரேவலில்லாவிட
மெங்குமில்லை. 13

எந்தவிடமு னிறைந்தமுக்கண்ணுடை யீசனைப்போல்குடி
யாவற்றையும், மைந்தனையன்னை வளர்த்திடுவாறுபோல் மங்காத
செங்கோல் நடத்தையிலே. 14

ஆவாயெனுமோர் பெருநகராமங் கடர்வனத்தேக்குவிஸ் தா
ரமுண்டாம், பூவாகுமிந்நகர் யிண்டியாவோல்டுக்கும் போதுமட்
டும்வரி விப்பதுண்டாம். 15

செல்லுமானமர மத்தனையுமவர் சென்றுவாலாயமா யின்ற
ளவும், தொல்லையிலாமல் வருவித்திருக்கையில் தோஷத்தைக்கே
ளடி பெண்ணரசே. 16

எத்தனையோநாளா யிறுமாந்திருந்தவன் யிம்மட்டும்நீர்வரக்
கூடாதென்று, தெத்திலுஞ்சுற்றிலுங் காவல்வைத்தேயவன் தீரா
க்கோபம் விளைத்தாண்டி. 17

தீராக்கோபம் விளைத்ததுமன்றி-யிவன் தென்னவன்போலே
கருவினதால், போராய்விளைத்தவன் வெல்லவென்றுநம்ம பூமியர
சர் மதித்தனராம். 18

நன்மையாகப்புத்தி சொல்லிவந்தார்வெகு நாளாய்மனதும்
பொறுத்துவந்தார், என்னமாகப்புத்தி போதிக்கினுமவன் யீன
மொழியே தொடுத்தாண்டி. 19

இராவணனுக்கு விபீஷணன்புத்தி யிரவும்பகலு முரைத்தது
போல், மராமரம்போன்றவன் தீபாவுக்குயிவர் மந்திரம்போலப்
புகன்றனராம். 20

கடவுளென்றனுந் தடையில்லையேநம்மைக் கார்க்குமிங்கிலா
ண்டு துரைகளுக்கு, நடனசபையொத்த பார்லிமெண்டுக்குள்ளே
நாளொருவரா யோசித்தனராம். 21

நன்மைக்குஉத்தரம் விள்ளவில்லைவெகு நாளாய்பதில்மொழி
சொல்லவில்லை, இன்னம்பொறுப்ப தழகல்லவென்றிவன் யேவ
லைச்சேகரம் செய்தனராம். 22

எவ்வளவென்று கணக்குரைப்பேனதை எத்தனையென்று முடியுரைப்பேன், கவ்வியமேகம்போல் சேனைதளங்களை கப்பலுக்கேத்த முயன்றனராம். 23

கடந்தஆயிரத் தொண்ணூற்றென்பத்தி ஐந்தாம்வருடம் டிசம்பரிலே, தொடர்ந்தாரிருபத் தாறுந்தேதியில் தாண்டாம்படைதிரளாகக்கொண்டு. 24

சங்கமென்னப்படை தான்கவர்ந்தாசத கோடியெனவேவி ஆயுதமும், பொங்குங்கடலென ஆக்ரமித்தியிவர் பெய்யும்மழைபோலத் தொடர்ந்தனராம். 25

பெய்யுமழையெனத் தான்றிரண்டியிவர் போர்க்கோலங்கொண்டு வழிநடந்து, பையெனச்சென்ற வதிசயசிங்காரப் பாட்டாகக் கேளடி பெண்ணரசே. 26

(தெம்) கத்தியுள்ளவீரர்களுங் கால்பலமும்சால்வகையும்
சுத்தகடல்சிற்புரமாம் சென்னைக்கடலோரத்திலே
(சிந்து) கொண்டுவந்துதானிருந்தும் கூட்டப்பெரும்படைகள்
அண்டத்துமேகமென்ன ஆயிரமாயிரமாம்
பண்டுபலாநிகளும் படைக்கானவண்டிகளும்
கண்டதில்கோடியென்றுய் கண்மணியேகேளடிநீ
(தெம்) படைகளுக்குப்போதுமட்டும் பருப்பரிசிகரிவகையும்
தடைகட்டுக்கப்பலுக்கு தந்தவகையென்னசொல்வேன்
(சிந்து) ஆடுகளுங்கோழிகளும் ஆனதொருமுட்டைகளும்
கோடியெனபாத்துகளுங் கூட்டுப்பொடிகளுடன்
காடைக்கவுதாரிகளும் கனியின்பலவகையும்
தேடியமைத்தபின்பு தேன்மொழியேகேளடிநீ
(தெம்) மாமிசங்கள்தானறுந்தா மன்னர்சிலர்க்குன்னிதமாய்
ஆவினெய்யும்ரொட்டிவெண்ணை அதிந்றநல்லசர்க்கரையாம்
(சிந்து) கப்பலேத்தாண்டுகற்கு கமாண்டன்சிப்பவர்கள்
சொற்படிபட்டாளமெல்லாஞ் சொருசாகத்தான்பிரிக்க
மைப்படிகண்ணியர்முதல் மக்களும்மிக்கவரும்
எப்பவருவீரென்று யிவ்வரனைக்கோறினராம்
(தெம்) வாழ்த்திவிடைவாங்கி வன்மையுடன்கப்பலிலே
பூர்த்தமலர்ச்சரம்போல் போர்நகைநாடினராம்
(சிந்து) பர்மாவெனும்பதியை பாங்காகத்தானடுத்து
நிர்மலமாகவேதான் நின்றெருகோணம்தில்
தர்மனத்திபாயென்னும் தரையின்னகர்முழுதும்
தர்மதுரைப்படைகள் தடம்போலநிறைந்தனராம்
(தெம்) பையனவேசென்றயிவர் அப்பர்பர்மாநகரம்போயி
ஐராவதிபார்த்தியிவர் ஆனந்தமாயேதுசொல்வார்.

ஆவாசண்டை முதல்பாகம் முற்றிற்று.

௧

கடவுள் துணை.

ஆவா சண்டை

இரண்டாம் பாகம்.

நொண்டிச்சிந்து.

ஆவாயெனும்பதியை சுத்தி அடர்வனத் துடனகர் பெருமை
யைக்கேள் தீபாயெனுமரசன் அவன் திருத்தமும் பொருத்தமுங்
குறித்திடுவேன் இந்திர னிவன்தாண்டி தெய்வ இந்திரலோகமும்
வேறே யிருக்குதென்று பந்தியந்தொடுக்காதே இந்த பட்டணத்
தைக்கிட்டியட்ட லட்சுமிகளும் குடியுளனொனயெவரும் புகழ்ந்து
டன் கூறிடு வாரதைத் தேறிடுவோம் ஐராவதினதியும் நகர் அடுத்
துளதாம்வனம் தொடுத்துளதாம் வெய்யவரிடக்காந்தி அங்கே
வெறுப்பில்லையாம் அந்தி சுருக்கில்லையாம் பையவேமொழியாளும் அ
ண்டம் பார்த்திடும்போதேமழை கோர்த்திடுமாம் பேர்த்திடும்வி
டங்களெல்லாம் வஜ்ர வாளைகளாம்ரத்ன பாளைகளாம் கிரடிமுடி
க்குகளில் கெட்டி முத்துகளேபெரும் புத்துகளாம் சுற்றிலும்வன
ப்பெருக்கின் உவப்பினை சொல்லவென்றாலதி வல்லவர்யார் தில்
லையங்கடவுளர்வாழ் கயிலங்கிரி யெனப்பரவியபெருமலையாம் இ
டைபலஜானகுகையாம் அதி யிருளெனதாவிய காவுகளாம் ப
டையெனப் பெரும்புலியாம் விடும் பந்தெனப் பறந்திடும் மான்
பெருக்காம் யானைக ளொருவெளுப்பார் அங்கே அடுத்தடுத்தொ
ட்டங்கள் வட்டமிடுமாம் திட்டெனச் சிறுத்தைகளாம் பெருந்
திரளெனமலயினக் குரள்வளமாம் திசையாமிருநான்கும் தேக்கு
கள் தேறிடு மாமண்டம் சீரிடுமாம் காரிருளெனச்சூழ்ந்து விருட்
சங்கள் கருத்துளதாமெங்கும் பெருத்துளதாம் பொருத்தங்கனி
னமனந்தம் யிருந்தாலும் புத்தியிலேயதி மத்திபனும். தந்தீன

கும்மி.

நகரின்பெருமை தனைப்புகழ்ந்துபின்த நால்வகைச்சேனை தள
ங்களெல்லாம், சுகமாய்ப்பேசி யிருக்கையிலேயந்த தோதகப்பா
வியென் செய்தாண்டி. 1

ஆரணியந்தன்னி லொளியவிட்டானதன் முன்னமேஐரா வ
தியைவிட்டான், காரணமேது மறியாண்டிகடும் பாவியென்வஞ்ச
கம் செய்தாண்டி. 2

துற்புத்திமீறி துடித்தாண்டியவன் தூண்டுகோல்தன்னை யிழ
ந்தாண்டி, கற்பனைபற்று மெலிந்தாண்டியந்த காலத்துக்கோல
மெடுத்தாண்டி. 3

கதிரோனைக்கண்டா லொடுங்குவதுங்கருங் கங்குலைக்கண் டால் கதும்புவதும், எதிராகநின்றவன் யுத்தஞ்செய்யாமலே யினத்தொழிலே புரிந்தாண்டி. 4

எப்போதும்புத்தம் புரிந்தறியான்யி ரோப்பியர்நீதியுங் கேட்டறியான், முப்போதுமுண்டு உறங்குவதன்றி முன்பின்னறியாண்டி. பெண்ணாசே. 5

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

எடுத்ததேசண்டை ஆவாமேலெங்லாண்டு
தொடுத்ததேகுண்டை

அநுபல்லவி.

தொடுத்தார்கள்பார்குண்டை துரியன்மேலர்ச்சுனன்
விடுத்தஅஸ்திரம்போலே விறைவிலொன்றுநாறாய் எடு

சரணங்கள்.

திருட்டும்பிரட்டுமவர் உருட்டுமுரட்டுதன்மை
திரமாய்த்தெரிந்தொரு புறமாய்ப்பட்டாளத்தை
நிறுத்திபிரங்கிகள் நீட்டியிடைகளெல்லாம்
நிறையுங்கடலைப்போலே வளையடுபபாக்கிகள்
பொரிந்திடத்தாட்டி செடிகள்மரங்களெல்லாம்
யெரிந்திடமாட்டி—எங்கும்
டுடுடுடுவென்று டுழிந்தாற்போலாகாயம்
படபடபடவென்று பளுத்தாக்கள்நிர்ந்துடன்
துடரத்துடரவொன்றின் பின்னொருகோடியாய்
தூற்றஆவாசேனை காற்றின்பஞ்சியைப்போலே எடு
மூலபலப்படை முனைகண்டஸ்ரீராமன்
மூச்சுவிடுமுன்னந்த ராட்சதப்படைகளை
காலபுரத்துக்கன்று கட்டணம்போல்தந்த
கதையாச்சுரணக்களம் மலையாச்சுபிணக்களம்
ஒன்றின்மேலொன்றாய் சிலதுசேனை
ஓய்ந்துபோய்நின்றார்—அப்போ
பொழியுந்துப்பாக்கிகள் பொருந்துமுன்பிரங்கி
போக்கொன்றுந்தெரியாமல் தாக்கிடசேனைகள்
விழிகள்பிதுங்கினோரும் மொழிகள்மறந்தபேரும்
விதியைநினைந்தபேரும் மதியைவெறுத்தபேரும் எடு
தாளொடிந்தபேரும் தலைகளறுந்தபேரும்
தட்டெனவிழுந்தபேரும் சட்டெனமடிந்தபேரும்
கால்களொடிந்தபேருங் கரங்கள்முறிந்தபேரும்
களையாய்விழுந்தபேரும் தலையற்றுருண்டபேரும்
தாவியபேரும் தண்ணீர்தண்ணீரென்று
கூவியபேரும்—துலுக்கர்

பாவிபாவியென்று பதைத்தோருங்குதித்தோரும்
பார்க்குமுன்துப்பாக்கி பட்டுவிழுந்தபேரும்
வீறுக்குமடிந்திட வாய்த்துதோவென்பாரும்
விட்டுமுகமாய்நோக்கி ஓட்டம்பிடித்தபேரும் எடு
சத்யமாய்ச்சண்டைக்கு வரவில்லையென்பாரும்
சலாமென்னைவிட்டிடும் சாவென்று அழுவாரும்
சுற்றுமுற்றும்பார்த்து பிணைத்துக்குள்நுழைவாரும்
சுருண்டுசுருண்டுசிலர் செத்தாற்போலிருந்தாரும்
சிப்பாய்கள்சிலபேர் தோர்ப்பேனோபாரென்று
துப்பாக்கியெடுப்பார்
எடுத்துபிடித்துஓங்கி யேனென்றுமுடுக்கையில்
யீசன்திரிபுரம் யெரித்தகதையைப்போலே
சிரித்துபீரங்கியை சீண்டிடவொருக்காலே
செண்டுபோலெகிறிட பந்துபோலுருண்டிட எடு
குளிருங்காய்ச்சலுங் கூண்டோடேபோச்சென்று
கூறும்பழமொழி போலேயாவாசேனை
திரளாகும்நால்வகை தீர்ந்தபின்தீபாவை
தீண்டிடதுரைமக்கள் தாண்டியேநகர்சுற்றி
பாராக்கள்போட்டு அரசர்க்குடையவீதி
தோராமல்காத்து
காத்துபின்னரசனைக் காவலுடனேகொண்டு
கடல்வழிபோனடையுடன் சென்னைதனைக்கண்டு
சீர்த்தப்பணியுமவன் சயனக்கட்டிலுமன்றி
சிம்மாசனமொன்றே யிம்மானிலம்பேராய் எடு

கும்மி.

அரசனைத்தீட்டி வசமாக்கிதங்கள் ஆயுதபாணிக்குள் ஆளாக்கி, திரையாங்கடல்வழி ஸ்டீமரின்மூலமாய்ச் சென்னைக்குத்தாண்டினர் பெண்ணரசே. 1

மன்னனும்மன்னவன் தேவியுமாயவன் மானகராண்ட சிம்மாதனமும், சென்னியிற்பூண்ட கிரீடமுஞ்செங்கோலும் சென்னைக்குவந்ததே பெண்ணரசே. 2

சித்திரக்கட்டிலும் ரத்தினப்பெட்டியும் ஜீவமாணிக்கப் பணிகளுடன், எத்தனைக்கோடியோ கம்பளமாமெச்சிற் றம்பலம்பூமி மதிப்பிடுமாம். 3

வச்சிரக்குத்துக்கால் மேஜைகளும்நல்ல வாணிப்பவழநாற்காலிகளும், பச்சைகள்நாட்டிய பூஜையினுசனம் பட்டணங்கண்டுதே பெண்ணரசே. 4

கிட்டியரம்பை காவலில்வைத்திட கெற்பவதியா மரன்மனைவி, விட்டாலுமென்னுயி ருன்னடியேயென் வேணவிதனத் தூடாடந்தாள். 5

மங்கையுமன்னனும் பொற்பணியுமங்கே மற்றுமுண்டான வுயிர்த்துணையும், கங்கையைக்கண்களில் சோரவிட்டுஅவர் கப்பலைக்கண்டு மெலிந்தனராம். 6

வெள்ளானைதன்னுயிர் விட்டதுவும்நம்ம வீட்டுத்துஜஸ்மரம் பட்டதுவும், கொள்ளைக்கொடுத்து மெலிந்திடவோபெண்ணே கொடியசகுனம் பலித்ததடி. 7

கருவுதரித்திட்ட வேளையின்தோஷமோ கர்த்தனமைத்த திதுதானோ, தருமயிடரும் புரிந்தறியேனடி நையலேயென்விதி வந்ததடி. 8

சொற்பனங்கண்டது மெய்யாச்சேநான் தொல்லுலகாண்டது பொய்யாச்சே, கற்பகோடிகாலம் அழியாதென்றது கனவாய் முடிந்துதே பெண்ணரசே. 9

எதைநினைந்துநான் தேறுவேண்டிபெண்ணே யாருக்குயென்துயர் கூறுவேண்டி, பத்தினியேயுன்னைப் பார்க்கப்பார்க்கமனம் பாகாயுருகுதே பெண்ணணங்கே. 10

பாவியாமென்விதி நீர்நினைந்துஎந்தன் பத்தாவேயுன்விதி நானினைந்து, கூவியழுதாலும் ஆவதில்லையொரு கோரிக்கைகேட்டருளையாவே. 11

ஏதேதோயெண்ணி மயங்குகின்றீரையா பெண்ணத்தைத் தாண்டி புலம்புகின்றீர், மாதுடனீநாமிவ் வாழியில்வீழ்ந்து மடிந்தால்மற்றொரு தோஷமில்லை. 12

என்னறக்கற்று யெழுத்தறவோதினும் பெண்புத்திபின்னிடுமென்றுசொல்லும், வண்ணத்தைப்போலேநீ முந்தாதேயின்னம் வந்தவிதியெல்லாங் கண்டிடுவோம். 13

அப்படியும்விதி போட்டிருந்தாலிந்த ஆழியிற்றானே மடிந்திடுவோம், கைப்பிடியாகப் பிடித்தவர்செய்திடுங் காட்சியைக்காணலாம் பெண்ணணங்கே. 14

ஏக்கமிட்டுபல யெண்ணமுற்றேசிற கறுந்தகிள்ளைபோல் தானிருக்க, அப்போதுசீக்கிர மாகவேசென்னையில் சேர்த்திட்டசேதிநா னென்னசொல்வேன். 15

சென்னைத்துறையிலே வந்திறக்கியவன் செம்பொன்மணிகளைத் தானிறக்கி, மன்னவன்றன்னை நடத்திடவேதுயர் மட்டடங்காம லழுதாண்டி. 16

சென்னையிலேசில நாள்நிறுத்தியவர் சீர்த்திப்பிசகாமல் காத்திருந்து, பின்னுலிரத்தின கிரிக்கனுப்பிய பெருமையைஎன்சொல்வேன் பெண்ணரசே. 17

ஆவாயெனும்நகரி லேயிங்கிலீஷ் அரசரின்கோர்ட்டுகச்சேரிமுதல், திவானம்தீர்வையு முன்சிபாலாபீசும் சீரமாயமைத்தாரோ பெண்ணரசே. 18

ஆவாசண்டை இரண்டாம்பாகம் முற்றிற்று.